REGD. No. M. 6311

THONE No. 556

தனி இதழ்
ஒரு அணு
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 254

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்..அண்ணதுரை

"THE NAM NADU" A TAMIL DAILY THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

சென்னை: பங்குனி 26உ வியாழன் (8—4—54) ★ ★ ★ வெளியூர்: பங்குனி 27உ வெள்ளி (9—4—54)

தென்னடு புறக்கணிக்கப்படுவதேன்?

நீண்ட தொலைவிலிருப்பதும் நெடுங்கூச்சல் போடாமல் இருப்பதும்தான் காரணமா?

—(:)—

பிச்சையோ உதவியோ வேண்டாம்— கடன்கூடக் கொடுக்க மறுப்பது ஏன்?

இந்தியப் பாராளுமன்றத்தில் தென்னாட்டுக் காங்கிரஸ் உறுப்பினரின் உரிமை முழக்கம்

புதுடில்லி எப்ரல் 7—

பாராளுமன்றத்தின் இன்றைய நடவடிக்கையில் நீர்ப்பாசன மின்சார உற்பத்தி இலாக்காவின் செலவினங்கள் அனுமதி விவாதத்தின்போது மத்திய சர்க்காரின் திட்டங்களில் 'திராவிட நாடு' புறக்கணிக்கப்படுவது ஏன்?—என்ற கேள்வி எழுப்பப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினர் பி. நடேசன் (சென்னை) பேசுகையில், 'மத்திய சர்க்காரின் நீர்ப்பாசன — மின்சார அமைச்சால், நாட்டின் மற்ற பாகங்களில் மட்டுமே புதுத் திட்டங்கள் நிறைவேற்றப் படுவதற்குக் காரணம், அந்த வட்டாரத்தினர் எழுப்பும் பெருங் கூச்சல்தான் போலும்!', என்றார்.

"தமிழ் நாடு—'தேசத்தின்' ஒரு மூலையில் ஒதுங்கிக் கிடப்பதாலும், அங்கு அதிகக் கூச்சல் எழுப்பப்படாததினாலுமே தான், தமிழ்நாடு, எந்தத் திட்டத்திலும் கவனிக்கப்படாமல் ஒதுக்கப்படுகிறது போலும்!" என்றும் குறிப்பிட்டார்.

"பெரியார் திட்டம் எந்த 'உரிமை' பிரச்னை, காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது; அந்தப் பிரச்னை, பின்னர் தீர்க்கப்படலாம்; வடஆற்காடு, தென் ஆற்காடு மாவட்டங்களில் நிறைவேற்றக்கூடிய கிருஷ்ணகிரி, சாத்தனூர் திட்டங்கள் தாமதமின்றி நிறைவேற்றப்பட வேண்டும்," என்றார்.

"இதற்குப் பிச்சையோ, உதவியோ அளிக்க மத்திய சர்க்கார் கேட்கப்படவில்லை என்றும், தேவைப்படும் தொகையை 'கடன்' கொடுக்க முன்வந்தாலே போதும்," என்றும் கூறினார்.

"அதற்குரிய அமைச்சர் நந்தா, நல திட்டங்களின் முன்னேற்றத்தைக் குறித்தும் விவரிக்கையில், தென்னாட்டைக் குறித்து எந்தச் சிறு குறிப்பும் கூறாதது, பெரிய ஏமாற்றத்தை அளிக்கிறது" என்றும் கூறினார்.

திரு. பூவராகசாமி பேசுகையில், "சில பகுதிகளில் வாழ்கின்றவர்களுக்கு மட்டுமே பல திட்டங்களினாலாகிய பயனும், நன்மையும் வழங்கப்படுகின்றதென்றும், மற்றும் பெரும்பாலான மக்களின் நலம் கைவிடப்பட்டுள்ளதெ'ன்றும் குறிப்பிட்டார்.

(4-ம் பக்கம் பார்க்க)

நவரத்னசாமியின் அடுத்த நீச்சல் திட்டம்

68 மைல் நீந்த முயற்சி

கொழும்பு, ஏப். 7—

இலங்கையிலிருந்த கோடிக் கரைக்கும், கோடிக் கரையிலிருந்து இலங்கைக்கும் 68 மைல் தூரமும் நீந்தியே செல்லுகின்ற அசாத்தியமான காரியத்தை அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் மேற்கொள்ள பாக் ஜலசந்தி நீச்சல் வீரர் நவரத்னசாமி திட்டமிட்டிருக்கிறார்.

காமராஜ் 'முடி' சூடுவார்!

முதல் அமைச்சர் பதவி ஏற்கத் துணிந்துவிட்டார்!

சென்னை, எப்ரல் 7—

இன்று மாலை 7 மணிக்கு திரு. காமராஜ் அவர்கள், சென்னையிலுள்ள தமது கட்சி நண்பர்களை யெல்லாம் கலந்தாலோசித்துக் கொண்டு, பதவி ஏற்கத் தீர்மானித்து விட்டார்.

ஆச்சாரியார், தமது ராஜினமாவை இன்று சமர்ப்பித்துவிடுவார் என்று கருதப்படுகிறது.

புதிய அமைச்சர் பொறுப்பை ஏற்கத் துணியும் தலைவர் காமராஜ், பத்திரிகை நிருபர்களால் சரமாரியான கேள்விகளுக்கு ஆளானார்.

'தங்கள் மந்திரி சபையில் எத்தனை பேர் இருப்பர்? ப[illegible]ருக்கு அவ்வாய்ப்பு? தாங்கள் மக்களுக்கு அறிவிக்கக் கருது[illegible] செய்தி என்ன? புதுக் கல்வித் திட்டத்தைப் பற்றிஎன்ன முடிவு செய்யப் போகிறீர்கள்? தமிழ் நாடு காங்கிரஸின் அடுத்த தலைவர் யார்? என்றெல்லாம் கேள்விகள் தொடுக்கப்பட்டுள்ளன.

காமராசரோ, எதற்கும் அசைந்து கொடுக்காமல், தாம் பதவி ஏற்கும் கட்டத்தில் இன்னும் என்னென்ன பிரச்னைகள் எழும்புமோ என்று எதிர்பார்ப்பவர் போல, மிகச் சுருக்கமாகவே பதிலளித்துள்ளார்.

தமிழ் நாடு காங்கிரஸ் கட்சி தலைமைப் பதவியைப் பற்றி பதிலளிக்கையில், "நான் விடாமலே இருந்துவிடப் போகிறேன்; அப்பொழுது என்ன செய்வது?....ஏன் இப்படி அவசரப்படவேண்டும்?" என்றும் கேட்டுள்ளார்.

பொதுவாக அவரது பதிலிலிருந்து காங்கிரஸ் கட்சியிலேயே—மேலிடத்தில்—அவர்களுக்கொரு நீதி, தனக்கொரு நீதி வலியுறுத்தப்படுவதாக அவர் உள்ளம் வேதனைப்படுவது புலனாகிறது.

உண்மையில், ஜனநாயகத்தின் படி, பெரும்பான்மையான ஆதரவு பெற்று வெற்றி பெற்ற நமக்கு, தேர்தலிலேயே ஈடுபடாமல் நுழைந்த ஆச்சாரியாருக்குக் காட்டப்பட்ட உரிமைகூட வழங்கப்படவில்லையே-என்ற உணர்ச்சி பிரதிபலிக்கிறது.

எவ்வாறுயினும், காமராசர் பதவி ஏற்பாரா? மாட்டாரா? என்று நிலவி வந்த சந்தேகம் ஒருவாறு தீர்ந்துவிட்டது.

மேலும் காமராசர், தமது கட்சி நண்பர்களிடத்தில், 'யாரும், யாருக்கென்றும் மந்திரியாக்கப்பட வேண்டுமென்று தம்மை நெருக்காமல் இருப்பதானால்தான்—கட்டாயப்படுத்தாமல் இருப்பதானால்தான், நான் பொறுப்பை ஏற்பேன்,' என்று கூறி, உறுதி மொழியும் பெற்றுக் கொண்டுள்ளாராம்.

முதலமைச்சராக முடிசூடும் காமராசர், முடியில் எவ்வளவு முட்கள் இருக்குமோ என்று எண்ணிப் பார்த்து, என்னென்ன தொல்லைகள் வரலாமோ என்று சிந்தித்துத்தான் இசைவதாகத்

(4-ம் பக்கம் பார்க்க)

பூனாவில் 'இந்தி' எதிர்ப்பு!

குஜராத்திகளே தூங்காதீர்!

லால்பாய் தோலக்கியா (அகமதாபாத்) என்பவர், 'டைம்ஸ் ஆப் இந்தியா' ஏட்டிற்கு எழுதியுள்ள கடிதமே, இந்தி எதிர்ப்பு வளர்வதை நமக்குத் தெரிவிக்கிறது.

அக்கடிதத்தில், அவர் குறிப்பிடுவதாவது:—

"1955-ஆம் ஆண்டு முதல், இந்தி மொழியைக் கல்லூரிகளில் பாடம் பயிற்றும் மொழியாக நுழைப்பதை எதிர்த்து "அமைதியான போராட்டம்" நடத்த இசைந்துள்ள பூனா நகர மக்கள் பாராட்டுக்குரியவ

(4-ம் பக்கம் பார்க்க)

அமைச்சர் வேலைக்கு அருகதை அற்றவரா அமைச்சராய் இருப்பது?

—(:)—

பிழை புரிவதில் முதல்வர் என்றபெயர் பெற்றுவிட்டார்!

தொட்டதெல்லாம் புழுதியாய் மாறிவிடுகின்றனவே!

டாக்டர் கேஸ்கார் பற்றி கவிஞர் ஹரீந்தரநாத் சட்டோபாத்தியாயாவின் கண்டனவுரை

புதுடில்லி, ஏப். 7—

"அமைச்சர் வேலைக்கு அறவே அருகதை அற்ற ஒருவரால், வானொலி விளம்பர இலாகா இயக்கப்படுகிறது. அவர் அமைச்சர் வேலைக்கு வந்த சிறிது காலத்திற்குள்ளாகவே பிழைகள் பல புரிவதில் முதல்தரமானவர் என்ற பெயரைப் பெற்றுவிட்டார். மீடாஸ் என்பவன் தொட்டால் தொட்டதெல்லாம் பொன்னாகும் என்று ஒரு கதை உண்டு; ஆனால், டாக்டர் கேஸ்கர் தொடும் எல்லாப் பொருள்களும் அப்படியே அந்தக் கணமே புழுதியாய் மாறிவிடுகின்றன,"

—என்று இந்தியப் பாராளுமன்ற உறுப்பினரும், புரட்சிக் கவிஞருமான தோழர் ஹரீந்திரநாத் சட்டோபாத்யாயா, இன்று வானொலி—விளம்பர இலாகா மான்யம் பற்றிய விவாதத்தில் கலந்துகொண்டு பேசும்போது, அந்த இலாகாவின் அமைச்சரான டாக்டர் கேஸ்கரின் தன்மையையும், போக்கையும், திறமையின்மையையும் குறித்து வன்மையாகக் கண்டித்து அழுத்தந்திருத்தமாக உணர்ச்சிப் பொங்க பேசினார்.

தோழர் சட்டோபாத்தியாயாவின் கனல் தெறிக்கும் பேச்சு, பாராளுமன்றத்தில் கூடியிருந்த காங்கிரஸ் உறுப்பினர்க்கு வெட்கத்தையும், வேதனையையும் ஒருபுறம் கொடுத்தாலும், அவர்களின் சினம் பொங்கி எழுவதற்குக் காரணமாகவும் அமைந்துவிட்டது.

தோழர் சட்டோபாத்தியாயா பேசும்போது, காங்கிரஸ் உறுப்பினர்கள் தங்களது வழக்கமான கூச்சல் போடும் முறையைக் கையாண்டு, கவிஞரின் பேச்சை அடக்கப் பார்த்தனர்.

புரட்சிப் புயலின் வேகம் தொடர்ந்து வீசிக்கொண்டே இருந்தது.

கவிஞர் பேசி முடித்ததற்குப் பிறகு பேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் அனைவரும், அமைச்சரின் மான்பக் கோரிகைகளை மறந்துவிட்டு, கவிஞர் சட்டோபாத்தியாயாவைத் தாக்குவதிலும், இழித்துரைப்பதி

(4-ம் பக்கம் பார்க்க)

நிதி மந்திரி விலகமாட்டார்!

புதுடில்லி, ஏப்ரல் 7—

செலவினங்கள் மீது நிதி இலாகா எவ்வளவு தூரம் மேற்பார்வை செய்யலாமென்பதின் மீது ஏற்பட்ட அபிப்பிராயத்தின் காரணமாக, நிதி மந்திரி தேஷ்முக் பதவியிலிருந்து விலகிவிடத் தீர்மானித்திருந்தார்; ஆனால் விலகுதலை வர்புறுத்தாதிருக்க அவரை ஒப்புக்கொள்ளுமாறு பண்டித நேரு செய்துவிட்டதாகத் தெரிகிறது எனவே, நிதி மந்திரி விலகமாட்டார் எனக் கூறப்படுகிறது

தஞ்சை மாநாடுகள் ஏப். 10, 11-ல்—திரண்டு வாரீர் தஞ்சைக்கு!

நம் நாடு

8-4-54 வியாழன்

இந்து'—'மித்திரனு'ம், இந்தி மொழியும்!

உயர்தரக் கல்விக் கட்டத்தில், இந்தியை இரண்டாவது கட்டாய மொழியாகப் பயிற்றுவிக்க வேண்டுமென்பது அ. இ. செயற்குழுவின் முடிவாகும்.

அதைக் குறித்து எழுதும்போதே, 'சுதேசமித்திரன்' இந்தியைப் பரப்புவதில் அவர்கள் செய்துள்ள இம் முடிவு தென்னாட்டைப் பொறுத்தவரையில், நல்லதென்று எண்ணவில்லை; தமிழ் நாட்டில் இந்தி கட்டாய பாடமாக்கப்படுகிறது; மாணவர்கள், அதைக் கற்றாலும், கற்காவிட்டாலும் அவர்களது தேர்ச்சியில் பாதிக்கப்படப் போவதில்லை என்பதை அறிவார்கள்...............; இந்தி மொழியைக் கட்டாய பாடமாக்க ஏன் செயற் குழு ஆலோசனை கூற வேண்டும்? உண்மையில் இதற்கு எவ்வளவும் அவசியம் கிடையாது" என்று குறிப்பிடுகிறது.

இதைத் தீட்டிய கரங்கள் உள்நோக்கமின்றி எழுதவில்லை என்பது நமக்குத் தெரியும்—"தமிழ் நாட்டில், மாணவர்கள் தாமாகவே இந்தி பயில்கின்றனர்; இந்நிலையில், 'தடிக் கொடுத்தான் ஆண்டி,' என்பதுபோல், 'கட்டாயம்' என்று தீர்மானிப்பானேன்," என்றுதான் ஆசிரியர் கேட்கின்றார். என்றாலும், 'கட்டாயம்' என்று சொல்வதென்றாலே, அச்சம், கலவர நினைவால் ஏற்படும் அதிர்ச்சி ஆசிரியருக்கு ஏற்படுவதை இது எடுத்துக்காட்டத் தவறவில்லை. அத் தலையங்கத்தின் மகுடமே, 'கட்டாயம் ஏன்?' என்பதுதான்!

ஆசிரியரது நோக்கம் அல்ல முக்கியம்; அதனால் ஏற்பட்ட, அவரது சகபாடிகளோ திருப்தி அடைவதானால் அடைந்து கொள்ளட்டும்! ஆனால், 'தமிழ் நாட்டில், இந்தி கட்டாயம் ஏன்?'—கேட்கிறது நாமல்ல; 'விடுதலை' அல்ல; 'சுதேசமித்திரன்'. ஒரு காலத்தில், இந்தியைக் கட்டாயப் பாடமாக்கவே வரிந்து கட்டிக்கொண்டு போர் தொடுத்த ஏடு! ஆச்சாரியார், அந்நாட்களில் கட்டாயப்படுத்தியபோது, அதை எதிர்த்தவர்களைச் செய்த ஏளனம் என்ன, சாதாரணமானதா? ஆனால், இன்றோ, எவ்வளவு பெரிய மாற்றம்—மனமாற்றம் ஏற்பட்டுள்ளது என்று காணுங்கள்.

ஆனால், இந்தி ஆதிக்கப் பீடத்தில் இடம் பெறுவதைப் பற்றி 'மித்திரன்' கவலைப்படவில்லை; எப்படிக் கவலைப்படும்? ஆனால் ஏதேனும் தம் மரபுக்கு, ஆதிக்கம் கிடைக்காது என்ற அச்சம் தட்டினால்தானே கவலை தோன்றும்! கவலை பிறக்கும்! ஆனால், பாவம், அந்நிலையும் விரைவில் பிறக்கும் என்றே தோன்றுகிறது, ஆட்சிப் பீடத்திலே வரும் ஓரிரு தென்னாட்டார் அவ்வப்போது அலறுவதைக் காண்பதால்!

"வட்டார மொழியைத் தவிர, கல்விப் பயிற்சிக்கும், வாழ்முறை வசதிக்கும் ஏற்ப ஆங்கிலம் ஒன்றை மட்டுமே உயர்நிலைக் கல்விக் கட்டத்தில், கட்டாய மொழியாகச் செய்வது மிகவும் நன்மையாகும் என எமக்குத் தோன்றுகிறது," என்று எழுதியுள்ளது, 'இந்து'—தனது 7—4—53 தலையங்கத்தில்!

காரணம் காட்டும்போது தான், தனது மேதாவிலாசத்திற்கு ஏற்ப, சமஸ்கிருதத்தைப் பயிலவதால் ஏற்படும் பயனைப்பற்றி எழுதிவிட்டு, 'சிறுபான்மையினர், வெளிநாட்டு மொழிகளில் ஆங்கிலம் தவிர மற்றொரு மொழியை—பிரெஞ்சு, ரஷ்யன் முதலியவற்றில் ஒன்றைப் பயில விரும்பினாலும், நாகரிகப் பண்பாட்டை அறிய விரும்பும் சமஸ்கிருதம், அராபி, பாரசீயன் முதலியவற்றில் ஒன்றைப் பயில விழைந்தாலும், இந்தியும் கட்டாயமானால், அவர்கள் கற்கவேண்டிய மொழிகள் ஐந்து ஆகி, பயிலவேண்டிய மேலும் பாடங்களில் கவனம் செலுத்த முடியாது போய்விடுமே,' என்று கவலைப்பட்டுள்ளது.

ஒருவேளைச் சோற்றுக்குத் திண்டாடுகிறவனிடம், அவன் உண்ணக்கூடிய அரிசிச் சோறே சரியாகக் கிடைக்காத போது, அவன் உண்ண விடலாமா—உண்டாலும் செரிக்காது; அது உணவு, வலுக்கட்டாயப் படுத்தாதே; பெருந்தொல்லை நிலைமையைத்தான் விளைக்கும், என்று ஏழை ஒருவன் கூறினால், அதைவிட்டு, 'விருந்துண்ணச் செல்பவருக்கு பல வகை பணியாரங்களையும் உண்ண ஆசையிருக்கும்; அதற்குத் தடை ஏற்படக்கூடிய விதத்தில் வரகு உணவைக் கட்டாயப்படுத்தாதே,' என்கிறார் ஒரு கொழுத்த முதலாளி!

அதுபோலத்தான், 'இந்து,' பல மொழிகளையும் பயில ஆசை உடையவர்களின் வசதிக்காக இந்தியைக் கட்டாயப்படுத்தக் கூடாது, என்பது!

ஆனால், ... தெளிவாகத் தெரிகிறது — இந்தி ..... இல்லை; ..... சிறப்பிற்கு, விருந்தான ..... ஆகாது, என்ற எண்ணம் இந்துவிற்கு தெளிவாக ஏற்பட்டுள்ளது—என்பது!

"பல்கலைக் கழகக் கல்லூரி நிலையிலும், வட்டார மொழியே, பயிற்சி மொழியாக இருப்பது இயற்கையாகும். ஆனால், 'இந்தியும் பயிற்சி மொழியாக இருக்கலாம்,' என்று ..... பயிலும் மாணவர் விருப்பத்திற்கு இடந் தருவதாக, அமைவதானால்தான், அதிக எதிர்ப்பு இல்லாமலிருக்கும்," என்று 'இந்து' எழுதுகிறது.

கல்லூரியிலும், பயிற்சி மொழியாக இந்தியைத் திணிக்க மேலிருந்து முயற்சிக்கப்படுமானால், அதற்கு எதிர்ப்பு வளர்ந்தே தீரும் என்பதே கருத்தாகும்.

மேலும், அகில இந்திய உத்தியோகத்திற்காக நிகழும் போட்டித் தேர்வுகளிலும், இன்னும், 15 ஆண்டுகளில் 'சர்வம் இந்தி மயம்' என்று ஆக்கிவிடும் நோக்கப்படி, இந்தி எப்படி எப்படிப் புகுத்தப்படவேண்டும் என்பதைக் காங்கிரஸ் செயற்குழு தீர்மானித்திருக்கின்றது.

அந்த 15 ஆண்டுகளும், மூன்று கட்டங்களாக இந்தி முடிகிறது.

முதற் கட்டத்தில், தேர்வு எழுதுபவர் தம் விருப்பம் போல் இந்தியிலோ, தாய் மொழியிலோ, ஆங்கிலத்திலோ விடையிறுக்கலாம்; ஆனால், ஆங்கிலத்தில் எழுதாதவர் மட்டும், ஆங்கிலத்திலும் தனியே வெற்றிபெற வேண்டுவது அவசியம்; அப்படி வெற்றி பெற்றவர்களில், இந்தியில் தேர்வு எழுதாதவர்கள் அனைவரும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் இந்தித் தேர்விலும் வெற்றி பெற்றாக வேண்டும்.

இரண்டாவது நிலையிலோ, உத்தியோகப் போட்டித் தேர்வின் ஒரு முக்கியத் தேர்வுப் பகுதியாகவே 'இந்தி' அமைந்துவிடும். அந்த இரண்டாவது கட்ட முடிவில், 'இந்தி'யே போட்டித் தேர்வுக்குரிய தகுதியடைந்து விட்டதாகக் கொண்டு, அம்மொழியிலேயே தேர்வுகள் அனைத்தும் நடத்தப்படும்.

அழகான மேலாடைபோல், தோளிலே கிடந்த பாம்பு, உருமாலைபோல் ஒன்றுக்கு இரண்டு சுற்றுகக் கழுத்தை வளைத்துக் கொண்ட பின், தனது வலிவைச் சோதிக்கக் கழுத்தை நெருக்குமானால், அம்மனிதனது நிலை எதுவோ, அதுவேயன்றே, இந்தி மொழியை ஆட்சி மொழியாக ஏற்றுக்கொண்ட மக்களுடைய நிலையும் இருக்கிறது.

அது, கழுத்தை நெரித்துக் கண் பிதுங்குகிற வரையில், உண்மையை உணராதவர்களுக்கும், பஞ்சமில்லை, துர்ப்பாக்கியம் பிடித்த இந்நாட்டில்!

ஆனால், 'இந்து'வோ, பள்ளிக்கூடத்துப் பிள்ளை தனது புத்திசாலித்தனத்தைக் காட்டிக் கொள்ளக் கேட்கும் கேள்விபோல் கேட்கிறது—உத்தியோகத் தேர்வு எழுதுகின்றவருள் இந்தியைத் தாய் மொழியாகக் கொண்ட அனைவருக்கும், ஆங்கிலத்தோடுகூட, ஏதேனும் ஒரு இந்திய மொழியும் கட்டாயப்படுத்தப்படுமோ?'—என்று!

'இந்தி வழங்காத பகுதியில் பணியாற்றச் செல்கிறவர்களுக்கு; அந்த மற்றொரு மொழி பயன்படுமல்லவா?'—என்று கருதுகிறது, இந்து!

ஆனால், இந்தி மொழியை இயல்பாகத் தாய் மொழியாகக் கொண்டவர்கள், அம்மொழியிலேயே முழுத் தேர்வையும் எழுதும் வாய்ப்பால் ஏராளமாக வெற்றி பெற்று, பிற வட்டாரங்களில் அதிகாரிகளாக உலவும்போது, மக்களுடைய தொடர்பைப் பெற வேற்று மொழி அறிவு பயன்படுமே—என்று ஆலோசனை கூறுவதாகத்தான் அதன் 'திட்டம்' அமைந்துள்ளது!

உத்தியோகம் பார்க்கின்ற—ஆளும் வர்க்கத்தின் வசதியைக் குறித்தது அல்ல, நாட்டின் மொழிப் பிரச்னை! மக்களின் உரிமையைப் பாதுகாக்கும் வழியாக அமையும் தகுதி பற்றியே மொழிக்குரிய இடம் தீர்மானிக்கப்பட வேண்டும். அந்த அடிப்படையையே மறந்துவிட்ட 'இந்து'வோ,—'தேர்வு எழுதுபவர்களில், இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவர்கள், வேறொரு இந்திய மொழி என்ற போால், தமக்கு மிகவும் எளிதான தாய் மொழியோடு தொடர்பு கொண்ட வங்காளம் அல்லது, கூர்ஜரத்தைத் தேர்ந்தெடுத்துக்கொள்ள இடமின்றித் திராவிட மொழிகளில் ஒன்றிலேயே தேர்ச்சி பெறும்படிக் கட்டாயமாகக வேண்டும்,' என்று குறிப்பிட்டுள்ளது.

அதன் அறிவுக் கூர்மை பாராட்டப்பட வேண்டியது தான்! ஆனால், இந்தியைத் தாய்மொழியாக உடையவர்களுக்குச் சொன்ன அந்த இலக்கணம், வங்காள—கூர்ஜர மொழியை உடையவர்களுக்கும் பொருந்தத்தானே செய்யும்? அவர்கள் தம் தாய் மொழியோடு இந்தி பயின்றால் போதும்; 'இந்தி' மொழியினர், அவர்தம் மொழியைப் பயின்றால் போதாது; வேறு மொழி பயிலவேண்டும் என்பதை எப்படி ஏற்பர்?

ஆனால், வடநாட்டார் அனைவரும், தென்னாட்டு மொழிகளில்—திராவிட மொழிகளில் ஒன்றைப் பயிலவேண்டும் என்று கூறுவதாலாவது பொருந்துகிறதா? எனில், அதுவும் இல்லை.

அப்படியானால், வங்காளியும், குஜராத்தியும், தமது தாய் மொழியோடு இந்தியும், திராவிட மொழி ஒன்றும் எப்படிப் பயில முன்வருவர்? ஒருநாளும் இசையமாட்டார்கள். எனவே, விபரம் என்று எவரும் கூற முடியாத ஒரு வழியிலேதான், 'இந்தி'யைத் தேசிய மொழியாக்குவதற்காகப் பலவித சப்பைக்கட்டுகள் கட்டலாமே தவிர, உண்மையும், நீதியும் ஒருநாளும் 'இந்தி'யை—அதன் ஆதிக்கத்தை ஏற்காது.

ஆனால், 'இந்து'வின் ஆசை வீண் போவானேன்? திராவிட மொழிகளில் ஒன்றைக் கட்டாயப்படுத்துவதை அவர்கள் ஏற்கிறார்களா?—என்பதை முயற்சித்தும் யார்த்தேனும் புரிந்து கொள்ளட்டும்.

மாறாக, தென்னாட்டு மொழிகளையே அவர்கள் வெறுத்து ஒதுக்குவர். ஒருவேளை ஏற்றாலும், திராவிட மொழிகளில் எதில் சமஸ்கிருதம் ஆதிக்கம் மிகச் செலுத்தி, திராவிட வடிவும் ஆரிய உடலுமாக அமைந்துள்ளதோ, அம்மொழியை, ஓரளவேனும் கற்க முன்வருவர். அதுவும் ஒப்புக்காகத்தான் இருக்கும்—வெறும் பட்டமாகத்தான் மாறும்!

வடநாட்டுக் கல்வி நிலையையும், பல்கலைக் கழகங்களின் தரத்தையும், தேர்வு பெறும் முறைகளையும் உணர்ந்தவர், இங்கு கூறப்படுவதை அறிவர்.

ஆனால், தமிழைக் கற்கவோ, அதில் தேர்ச்சி பெறவோ அவர்கள் ஒருநாளும் இசைய மாட்டார்கள்; இசைந்தாலும், அவர்களால் முடியாது; முடிந்தாலும், 'இந்து' கருதுவது போல், அதனால் ஒரு சிறு நன்மையும் ஏற்படாது!

உண்மையில், 'ஏன், இந்த மொழிச் சிக்கல், எந்த வழியும் விட மறுக்கிறது,' என்று எண்ணலாம், சிந்திப்பவர்கள்! காரணம், அடிப்படையே தவறு என்பதுதான்!

உலக நாடுகளோடு தொடர்பு கொள்ள ஒரு மொழி தேவை—அதற்குத் தக்க ஒரு மொழி, இந்திய மொழிகளில் இல்லாததால்! 'ஆங்கிலத்'தைக் கைக்கொள்ளத்தான் வேண்டும் என்பதையும் ஏற்றுக் கொண்டு, 'இந்தியாவிற்கு தேசிய மொழி என்று ஒன்று தனியாக இருக்க வேண்டும்; அதற்கு இந்தியைத்தான் அனைவரும் ஏற்றுக் கற்க வேண்டும்,' என்று தீர்மானித்ததே இவ்வளவு சிக்கலுக்கும் காரணமாகும்!

உலகம் முழுவதற்கும் தொடர்பு கொள்ளும் ஆங்கிலம்—இந்தியாவிற்குள்ளும் (இன்னும் பேரளவாக இருந்த போதும்) தொடர்பு கொள்ளத் துணை செய்த ஆங்கிலம்—ஏன் இனியும் இந்தியாவிற்கும் பொது மொழியாக இருக்கக் கூடாது?

சிறு பையனின் கையிலே தனித் தனியே இரண்டு அணுக்களைக் கொடுத்து, 'இந்த அணுவிற்கு மசால் வடை; இந்த அணுவிற்கு உளுந்து வடை,' என்று கூறிய 'அறிவாளி'யின் கதையாகத் தான் இருக்கிறது, இந்தியும்—ஆங்கிலமும், இரண்டு வேறு வேறு இடங்களில் பயன்படுத்த என்பதும்!

ஒரு புகை வண்டியில் பயணம் செய்யும்போது, ஓர் ஆங்கிலேயன் - ஒரு வடநாட்டான் - ஒரு தமிழன் ஆகிய மூவரும் சந்தித்தனர்; அந்த ஆங்கிலேயனோடு பேசும்போது, மூவரும் ஆங்கிலத்தில்தான் உரையாடினர்; ஆங்கிலேயன் இறங்கிவிட்டான்; உடனே வடநாட்டான் இந்தியில்தான் பேசுகிறான் - ஆங்கிலத்தில் பேசவில்லை; தமிழனும் இந்தியில் பேசுகிறான் என்றால், அந்தக் காட்சி எப்படித் தோன்றுகிறதோ, அப்படித்தான் இன்றைய மொழி நிலை உள்ளது!

'ஆள ஒரு மொழி—அடிமைப்பட பலமொழி,' என்பதே இன்றைய நிலை. தேவையற்ற 'இந்தி' தேசிய மகுடம் சூட்டப்படுவதாலேயே இத் தொல்லை!

ஆங்கிலத்தையே பொது மொழியாகக் கொண்டால் அனைவரும் அவரவர் வட்டாரத் தாய் மொழியோடு, ஆங்கிலத்தை மட்டுமே பயின்றால் போதும் என்ற நிலை பிறக்கும்—மொழிச் சிக்கல் தீரும்!

சிக்கல், அப்படித் தீராவிடில், கயிறு அறும்; தேசியம் மட்டுமல்ல—'தேசம்' என்ற கருத்தே புது வடிவம் பெறும்; திராவிடநாடு திராவிடருக்காவது மிகவும் எளிதாகும்!

இக்கருத்தை, 'இந்து'—'மித்திரன்' அப்படியேவா ஒத்துக்கொள்ளும்? — அதுவும் இப்பொழுதே! ஆனால், 'இந்து'வும் 'மித்திரனு'ம்கூட, இத்திக்கு மூட்டைகட்டப் போட முன்வருகின்றன என்பதைக் காணவே மகிழ்கிறோம்!

"அடிமேல் அடி அடித்தால், அம்மியும் நகரும்," என்பது நாமறிந்ததுதானே!

தமிழ் மொழி ஆட்சி மொழி ஆகவேண்டும்

தாய்மார்கள் மாநாட்டில் தீர்மானம்!

திருவண்ணாமலை, ஏப். 4— அகில இந்தியப் பெண்கள் ...க ஆண்டு மாநாடு, திருச்சி ...ஞ்சம்மாள் அவர்கள் தலைமை ...ல் நடைபெற்றது. தமிழ் நாட் ...ன் பல பகுதியினின்றும் தாய் ...ர்கள் கலந்து கொண்டனர். மாநாட்டில், இந்தியப் ...ராளுமன்றம் இந்து சமூ ...த் திருத்தச் சட்டத்தை ...டனே நிறைவேற்ற வேண்டு ...மென்று கேட்டுக் கொண் ...ம், கர்ப்பத்தடை நிலையங்கள் ...தாற்றுவிக்கும் மசோதாவை ...ரவேற்றும், சென்னை அரசாங் ...ம், தமிழையே ஆட்சிமொழி ...ாகச் செய்ய வேண்டுமென்றும், ...மிழிலேயே நிர்வாகத்தை ...டத்த வேண்டுமென்று கேட் ...க் கொள்வதாகவும் தீர்மானங் ...ள் நிறைவேற்றப்பட்டன.

மேலும், பெருந் தண்டனை ...ரகக் கொள்ளப்படும் தூக்கு ...ண்டனையை அரசாங்கம் ...கவிட வேண்டுமென்றும், கல் ...ரி மாணவர்கள் கிராமத் ...தொண்டில் ஈடுபடும்படிப் பல் ...லைக் கழகம் செய்யவேண்டு ...மென்றும், புற்றுநோய் தடை ...யக்கத்திற்குப் பொதுமக்கள் ...பொருளுதவி செய்யக் கேட்டுக் ...கொண்டும் தீர்மானங்கள் நிறை ...வேற்றப்பட்டன.

ஆலயங்களில் வீணாகக் குவிக் ...கிருக்கும் நிதியிலிருந்தும், அறு ...நதகளின் கல்வி நலத்திற்குச் ...சிறிது செலவிட முன் வந்திருக் ...கும் அரசாங்கத்தின் செயலையும் ...ஒரு தீர்மானத்தில் வரவேற்றுள் ...ளனர்.

இலங்கை — அவிசாவளை தி. மு. கழக (கிளை)

28—3—54ல் கழகப் பணி மனியில் தோழர்கள் டி. எம். பீர் முகமது, என். கதிரவன் ஆகியோர் முன்னிலையில் தேர்தல் கூட்டம் நடைபெற்றபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: ர. என். கணேசன்; துணைச்செயலாளர்: என். ஆர். பாண்டியன்; பொருளாளர்: வி. குருநாதன்; மத்திய கழகப் பிரதிநிதி: பி பாண்டியன்; தோழர்கள் ஏ. ஜெபராஜ் ஜோக்கின், பெருமாள், துரைசாமி, பெரியண்ணன், கலாநிதி, ஐயப்பன், லட்சுமணன், தங்கதுரை, பிச்சை, சின்னதம்பி ஆகியோர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

—:0:—

பொன்னேரியில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

30—3—54ல், எருமப்பட்டி தி. மு. கழகச் சார்பில், பொன்னேரியில் தோழர் ஜெபசீலன் தலைமையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுசமயம், தோழர்கள் சேலம் சிற்றரசு—சுப்ரமணியம், சி. இராமதாசன், இளவழகன் ஆகியோர் திராவிட நாடு பிரியவேண்டிய அவசியம் பற்றி விளக்கவுரையாற்றினர்.

சிங்காரக் கோட்டையில் தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

31-3-54ல், இவ்வூர் மண்டிக்கல் திடலில் இரவு 7 மணியளவில் தோழர் கூ. க. சக்தசாமி தலைமையில் ஓர் மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் வசனப்பித்தன் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினார். தோழர் சையது இப்ரூகிம், கொடியேற்றி வைத்தார்.

ஏகாம்பரகுப்பம் தி. மு. கழகம்

3—4—54 இரவு 7 மணிக்கு செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது, புதிய நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்: செயலாளர்: கே. ஏ முனுசாமி; துணைச் செயலாளர்: தருமலிங்கம்; பொருளாளர்: சி. எம் என். மணி; துணைப் பொருளாளர்: என். என். வி. தாமோதரன்; மாவட்டப் பிரதிநிதி: எம் வி. ராமசாமி; கமிட்டித் தலைவர்: கே. சுப்பிரமணியம்; மேற்பார்வையாளர்: ஏ. ஜி. பொன்னப்பன்; கமிட்டி உறுப்பினர்கள்: எஸ். ஏ. ராமன்; எஸ். ஜி. ...ஷ்டன், எம். ஓ. ராமலிங்கம், ...ஷ்டப்ப வாத்தியார், லட்சுமணன், கே. ஆர். சுப்ரமணியம், ஏ. கே. அண்ணாமலை, டே. ஜி முருகேசன், ஏ. என் ஏழுமலை, பி தேசப்பன், சி. கே. ராமசாமி, கே. எம். ராமசாமி, பி. எம். சுப்ரமணியம், எம். ஈ. பாலசுப்ரமணியம், என். பி. வீராசாமி.

...க்ராமணூர் தி. மு. கழகம்

31—3—54ல் நடைபெற்ற கழகக் கூட்டத்தில் புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: இரா. அழகர்சாமி; துணைச் செயலாளர்: ம. நாகராசன்; பொருளாளர்: பூ பூம்பரைநாதன்; மாவட்டப் பிரதிநிதி: கா. மார்க்கசகாயம்; செயற் குழு உறுப்பினர்கள்: கா. வெள்ளைச்சாமி, பூ. க. காமாட்சி, வெ. க. பழனிச்சாமி கா. ராமசாமி, ஆ. காமாட்சி, த. க. முத்து, சு. ஜெயராமன், கா. கருப்பையா, ஆ தியாகராசன், கு அன்னகாமு

...நல்லுக்குழி தி. மு. கழகம்

திருச்சி, ஏப். 6— 3—4—54 மாலை 3 மணியளவில் அழகர் கட்டிடத்தில் செயற்குழு கூடி, நன்கொடை வரவு—செலவு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

தஞ்சை மாநாடு

தீர்மான ஆய்வுக் குழுக் கூட்டம்

"11-4-54 அன்று, மாநாட்டில் நிறைவேற்ற இருக்கும் தீர்மானங்களைப் பற்றி ஆலோசிக்க, 10—4—54 இரவு 10 மணிக்கு மாநாட்டுப் பந்தலுக்கு அருகே உள்ள கட்டிடத்தில், பிரதிநிதிகள் கூட்டம் நடைபெறும். பிரதிநிதிகள் தவறாது வர வேண்டுகிறேன்," எனச் செயலாளர் ஏ. வி. பதி அறிவிக்கிறார்.

நெல்லை நகர தி. மு. கழக செயற்குழுக் கூட்டம்

26—3—54 இரவு 8-30 மணியளவில் நிர்வாகக் குழுக் கூட்டம் தோழர் சு. சததியபெருமாள் தலைமையில் நடைபெற்றபோது, ஏப்ரல் திங்கள் முதற்கொண்டு, கழக அலுவலகத்தை நெல்லை நகர் மாணவர் முன்னேற்றக் கழக அலுவலகத்தில் வைத்துக் கொள்வதென்றும், மற்றும் பல முக்கியத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

"கழுதை தேய்ந்து — கட்டெறும்பாகிறது!"

—(:)—

"தேவி"யின் தெளிவு!

சென்னை, ஏப். 6—

"காங்கிரசிற்கு நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான நபர்கள் வருவார்கள்; நூற்றுக்கணக்கான பிரதிநிதிகளுக்கு வசதிகள் செய்து கொடுக்க வேண்டும்; எந்த இடத்தில் காங்கிரசை நடத்தினால் எல்லோருக்கும் சௌகரியமாக இருக்குமோ அந்த இடத்தில் நடத்த பிரதேச காங்கிரஸ் கமிட்டி ஏற்பாடு செய்ய வேண்டும்."

"தெற்கே காங்கிரசிற்கு ஆதரவு குறைந்து வருவது சமீபத்தில் நடந்த சில நிகழ்ச்சிகளிலிருந்து நமக்கு நன்கு தெரியவருகிறது; இதை உத்தேசித்தே சென்னையில் அடுத்த ஆண்டு காங்கிரஸ் மகா சபையை நடத்த காரியக் கமிட்டி இசைந்துள்ளது என்று யூகிக்கவும் இடமிருக்கிறது.

—"பா. தே"

விளாப்பாக்கம் (வ. ஆ.) தி. மு. கழகம்

1—4—54 மாலை 7 மணிக்கு, தோழர் எ. குப்புசாமி தலைமையில் கழக உறுப்பினர் கூட்டம் நடைபெற்றபோது, ஆண்டு விழா வரவு—செலவு கணக்கு ஒப்புக் கொள்ளப்பட்டது. பின்னர் இவ்வாண்டிற்கு புதிய செயலாளர்: அ. மா. குப்புசாமி; துணைச்செயலாளர்: ரே. வெ. சின்னப்பா; மாவட்டப் பிரதிநிதி: தி. க. நாகநாதன்; பொருளாளர்: அ. ரா. வெங்கடாசலம்; செயற்குழு உறுப்பினர்கள் 16 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செம்மாண்டம்பாளையம் தி. மு. கழகம்

27—3—54ல், தோழர் இரா. நல்லதம்பி தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. அது சமயம் கழகத்தின் சட்ட திட்டத்தை மீறி நடந்த துணைச் செயலாளரையும் மற்றும் நான்கு உறுப்பினர்களும் ஆறு மாதத்திற்கு கழகத்திலிருந்து விலக்கப்பட்டனர்.

குடந்தை தி. மு. கழகம்

4—4—54 காலை 10 மணிக்கு தோழர் பி. ஏ. துரைராஜ் தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றது.

16—2—54ல் நடைபெற்ற கூட்டத்தின் வரவு—செலவு ஒத்துக் கொள்ளப்பட்டது; தோழர்கள் செம்பலம் சாமியப்பா, அருப்புக்கோட்டை முத்து, விருதுநகர் வி. வி. தனுஷ்கோடி, பட்டீஸ்வரன்பட்டி வெள்ளையம்மாள், குடந்தை கே. கே. சோமசுந்தரம் ஆகியோர் மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கப்பட்டது; தஞ்சை மாநாட்டிற்குப் பிரதிநிதிகளாக தோழர்கள் பி. ஏ. துரைராஜ், எஸ். சோமு தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருமணம்

31—3—54ல், சேத்தியாத்தோப்பு தி. மு. கழகச் செயலாளர் ஆர். கணேசன் தலைமையில் தோழர் ஆதாரூரனுக்கும் — தோழியர் சின்னபெண்ணுக்கும், தோழர் குன்பிக்கும்—தோழியர் ஆபாகன்னுக்கும் திருந்திய திருமணம் நடைபெற்றது. திருமணத்தின் நினைவாக 'நம் நாடு' இதழ் வளர்ச்சிக்கு ரூ. 2 அன்பளிப்பாக மணமக்களால் அளிக்கப்பட்டதை தெ. ஆ. மா. செயலாளர் தோழர் ஆர். பாலகுருசாமி மூலம் வரப்பெற்றோம்—நன்றியுடையது -வெளியிடுவோர்.

• • •

சிதம்பரம் வல்லம்படுகை ஆசிரியர் வேலாயுதம் படிப்பகக் கமிட்டிக் கூட்டம் 2—4—54 இரவு 8 மணிக்கு தோழர்கள் ப. துரைசாமி தலைமையிலும், ஆர். பாலகுருசாமி முன்னிலையிலும் நடைபெற்றது. அதுசமயம் படிப்பகத்திற்கு மனை வாங்க ரூ. 250 பொதுமக்களிடம் நிதி வசூலிப்பதெனவும், நிதிக் குழு தலைவராகத் தோழர் கே. நாராயணசாமியும், உறுப்பினர்களாகத் தோழர்கள் வி துரைசாமி, ஆர். பாலகுருசாமி, நி. ச. குப்புசாமி, அ. பாலகிருஷ்ணன் ஆ. இராமானுசம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டும் முடிவு செய்யப்பட்டது.

சேலம் மாவட்ட தி. மு. கழக 2-வது மாநாட்டு செயற்குழு கூட்டம்

31—3—54ல், மாநாட்டு அலுவலகத்தில், தோழர் ப. இராமலிங்கம் தலைமையில் மாநாட்டு செயற்குழு கூட்டம் நடைபெற்றது.

மே. 1-ந் தேதி நடைபெறும் சமுதாய சீர்திருத்த மாநாட்டிற்கு திருவண்ணாமலை தோழர் ப. உ. சண்முகம் அவர்களைத் தலைவராகவும், சென்னை வழக்கறிஞர் தோழர் கோகுலகிருஷ்ணன் அவர்களைத் திறப்பாளராகவும், மே. 2-ந் தேதி நடைபெறும் அரசியல் மாநாட்டிற்கு தோழர் இரெ. இளம்வழுதி, எம். ஏ., பி. எல், அவர்களைத் தலைவராகவும், மதுரை எஸ். முத்து அவர்களைத் திறப்பாளராகவும் அழைப்பதென முடிவு செய்யப்பட்டது.

மாநாட்டுப் பந்தலுக்கு 'பரசுராமன் பந்தல்' என்றும், அரங்கிற்கு 'வள்ளியப்பன் அரங்கம்' எனப் பெயர் இடுவதென முடிவு செய்யப்பட்டது.

மாநாட்டின் அலுவலகம், "59/815, பார்க் தெரு, சேலம் டவுன்," என்ற முகவரியுடைய கட்டடத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

மாநாட்டு வேலைகளை செயலாளர் ப இராமலிங்கம் அவர்களும், பொருளாளர் பி. சம். குப்புசாமி அவர்களும் சேலத்தில் தங்கி கவனித்து வருகின்றனர்.

★★★

தஞ்சை மாவட்ட இரண்டாவது திராவிட முன்னேற்றக் கழக

சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள்

★

தஞ்சையில் A. Y. அருளானந்தசாமி நாடார் தோட்டத்தில் அமைத்துள்ள பன்னீர்ச்செல்வம் பந்தலில் — அழகிரி அரங்கில் 10, 11 4—54-ந் தேதிகளில் நடைபெறும்

10 4—54 சனி:	11—4—54 ஞாயிறு:
சமூக சீர்திருத்த மாநாடு	**அரசியல் மாநாடு**
தலைவர்: ஏ. கோவிந்தசாமி, எம். எல், ஏ.	தலைவர்: என். வி. நடராசன்
துவக்குபவர்: க. அன்பழகன்	துவக்குபவர்: ஈ. வெ. கி. சம்பத்

இரு நாட்களிலும்—தி. மு. கழகப் பொதுச்செயலாளர் அண்ணாதுரை, தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், கே. ஏ. மதியழகன், மு. கருணாநிதி, சி. பி. சிற்றரசு, கி. மனோகரன், அ பொன்னம்பலனார், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, என். எஸ். இளங்கோ, ஏ. கே. வேலன், தில்லை வில்லாளன், எஸ். சுயம்பிரகாசம், எம். எல். ஏ., கே. ஆர். சம்பந்தம், எல், எல், ஏ., எம். பி. சுப்பிரமணியம், எம். எல். ஏ., வேலு, எம். எல். ஏ., பழனியாண்டி, எம். எல். ஏ., எஸ். பி. தங்கவேலு, எம். எல். ஏ, தோழியர்கள் இராமாமிர்தத்தம்மையார், சத்தியவாணிமுத்து ஆகியோர் கலந்துகொள்வார்கள்

சி. எஸ். ஜெயராமன், நாகூர் அனீபா, கே. ஆர். செல்லமுத்து இசை நிகழ்ச்சிகள் இரு நாட்களிலும் நடைபெறும்

★

இரு நாட்களிலும் கே. ஆர். ராமசாமி குழுவினர் நடிக்கும் நாடகங்கள்

10—4—54 சனி இரவு:	11—4—54 ஞாயிறு இரவு:
"காதல் ஜோதி"	"ஓர் இரவு"

இரு நாட்களுக்கும் அனுமதி விவரம்:—(நாடகங்கள் உட்பட)

வரவேற்பாளர் ரூ. 5, பிரதிநிதி ரூ. 2, பார்வையாளர் ரூ. 1. பெண்களுக்கு அ. 8

குறிப்பு:—உணவுக்குத் தனிக் கட்டணம் இரு நாட்களுக்கும் ரூ 2—8—0

★★★

புதுவையில் விடுதலை இயக்கம் வீறுகொண்டெழுந்தது

ஆணவ ஆதிக்க அடக்குமுறைகள் தகர்க்கப்படுகின்றன!

மக்களாட்சி ஆங்காங்கு மலர — ஆதிக்க ஆட்சி அழிகிறது

போர்ப் படையில் சகல கட்சிகளுடன் தி. மு. கழகமும் போர்க் கோலம் பூண்டது

புதுவை, ஏப் 7—

பிரெஞ்சு ஆதிபத்திய திட்டுகளின் விடுதலை இயக்கம் ஒரு புது முழக்குப் பெற்றுக் கிளர்ந்து எழுந்தது. அந்த வட்டாரங்களை இந்தியாவுடன் இணைய விடவேண்டும் என்று முழங்கியபடி, பலப்பல எதிர்ப்பு நடவடிக்கைகளை மக்கள் மேற்கொண்டனர்; இந்தியக் கொடியையும் அடையாளமாக உயர்த்தினர்.

இரவெல்லாம் விழிப்போடு காவல் பணி செய்துவந்த போலீசார், இந்தியக் கொடிகளைக் கண்டபோது இறக்கிப் பறித்துச் சென்றனர்.

புதுவையின் நாலு பக்கங்களிலிருந்தும் புறப்பட்டு புதுவையின் நடு இடமாகிய ஓதியஞ்சாலை மைதானத்தில் வந்து குழுமிய நான்கு ஊர்வலத்திலும் கலந்துகொண்ட முக்கியத் தொண்டர்களையெல்லாம் ஆயுதந் தாங்கிய பிரெஞ் சிந்தியத் துருப்புக்களின் உதவியுடன் கைது செய்தனர். 300-க்கு மேற்பட்ட விடுதலைத் தொண்டர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிகிறது.

தி. மு. க. உறுப்பினர்கள் பங்கேற்றனர்

காலை 6 மணிக்கு, தி. மு. கழக உறுப்பினர்களும், பிரெஞ்சு-இந்திய யுவர் காங்கிரஸ் உறுப்பினர்களும், கம்யூனிஸ்டு உறுப்பினர்களும் மாக்மொட்டையன் பேட்டையிலிருந்து கொடிகளைத் தாங்கி, எதிர்ப்பு ஒலிகளை முழங்கிக்கொண்டு, பொதுக்கூட்டம் நடத்துவதற்காக ஓதியஞ்சாலை மைதானத்தை நோக்கி ஊர்வலமாகப் புறப்பட்டனர்; இவர்களில் 46 பேர் கைது செய்யப்பட்டனர்.

நெருக்கடி!

புதுச்சேரியில் விறுவிறுப்பாக இயக்கம் ஆரம்பமாகிவிட்டது. மாலையிலும், இரவிலும் போலீசாரும், இராணுவத்தினரும் வான்களில் துப்பாக்கி சனியன்களுடனும், ரைபிள்களுடனும் காவல் புரிந்து வருகின்றனர்.

நிர்வாகிகள் திண்டாட்டம்

புதுச்சேரி சிறையில் 250 பேர்கள்தான் இருக்க முடியும்; முன்பே, அது நிறைந்துவிட்டது; இன்று கைதான தொண்டர்கள், புதுவையிலுள்ள இராணுவ விடுதிக்குக் கொண்டு செல்லப்படுகின்றனர். மேலும் தொண்டர்கள் வந்தால் அவர்களை எங்கு வைப்பது என்று தெரியாமல் அதிகாரிகள் திண்டாடுகின்றனர்.

தொண்டர்கள் தாக்கப்பட்டனர்?

பிரெஞ்சு இந்தியத் தலைவரில் ஒருவரான திரு. சுப்பையா, கைது செய்யப்பட்ட தொண்டர்கள் காவலில் வைக்கப்பட்ட போது போலீசாரால் அடிக்கப்பட்டுள்ளனர் என்றும், நீண்ட நேரம் தாமதித்தே மாலையில் சிறிது கஞ்சி அவர்களுக்கு அளிக்கப்பட்டதென்றும் தெரிவிக்கிறார்.

• • •

ஊர்வலத்தின் முன்னணியில் நடந்து, ஒலிபெருக்கியில் விடுதலை முழக்கம் செய்துகொண்டு வந்த ஒரு இளைஞரை, போலீஸ் அதிகாரி ஒருவர், ஒலிபெருக்கியைப் பிடுங்கிக்கொண்டு, குத்தித் தாக்கியுள்ளார்; மற்றவர்கள் கையிலுள்ள கொடிகளும் பிடுங்கப்பட்டுள்ளன.

இந்தியக் குடிமக்களுக்கு போலீஸ் தடை!

மாஹி, ஏப் 7—

மாஹிக்குச் செல்லும் இந்தியக் குடிமக்களை பிரெஞ்சு ஆயுதப் போலீஸ் துன்புறுத்தி வருகிறதென்றும், பலர் மாஹிக்குள் வரவிடாமல் தடுக்கப்பட்டுள்ளனர் என்றும் தகவல்கள் கிடைத்துள்ளன.

நாடு கடத்தப்படுவார்?

தலைச்சேரி, ஏப். 7—

மாஹி போலீசாரால் அழைத்துச் செல்லப்பட்ட மகாஜன சபையின் பிரபல ஊழியர் டி. கே. உஸ்மான் போலீஸ் அதிகாரிகளால் நீண்டநேரம் கேள்விகள் கேட்கப்பட்ட பிறகு, நடு இரவில் விடுதலை செய்யப்பட்டார்.

அவர் தனது தேசீயப் பணியில் தொடர்ந்து ஈடுபட்டால், நாடு கடத்தப்படுவார் என்று எச்சரிக்கை செய்யப்பட்டாராம்!

தென்னாடு.........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"பஞ்சத்திற்குக் காரணமாகியுள்ள திருச்சி, பெரம்பலூர் வட்டத்தில், நிரந்தரமான நீர்ப்பாசனத் திட்டம் ஒன்றை நிறைவேற்ற வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

• • •

'குற்றச்சாட்டை' ஏற்கிறார் அமைச்சர்

அமைச்சர் நந்தா, விவாதத்திற்குப் பதிலளிக்கையில், 'பெரியார்' திட்டத்திற்குத் தடையாக உள்ள பிரச்னையை விரைவில் தீர்க்க முயற்சிப்பதாகவும், 'நந்திகொண்டா' திட்டம் விரைவில் நிறைவேற்றப்படுமென்றும், அதற்காகவே சில 'ஆய்வுகள்' நிகழ்ந்து கொண்டுள்ளன என்றும் கூறினார்.

மேலும், நாட்டின் எல்லா, வளப்பங்களையும் ஆராய்ச்சி செய்து, பெருக்குவது அரசாங்கத்தின் கடமையே என்றும், அதிலும் முக்கியமாக, தென்னாட்டைப் போன்று, கிடைக்கக்கூடிய எல்லா வாய்ப்புகளையும் மின்சார உற்பத்திக்கும் பயன்படுத்திக் கொள்ளாமலிருப்பதோடு, சிற்சில நீர்ப்பாசன வசதிகளை மட்டுமே பெற்றுள்ள பகுதிகளில் கவனம் செலுத்துவது அரசாங்கத்தின் கடமையேயாகும் என்றும், அவைகளுக்கு நிச்சயமான முதலிடம் அளிப்பதுதான், தேசத்தின் பல பகுதிகளுக்கும் சமமான அளவில திட்டங்கள் வகுக்கப்பட்டதாகும் என்றும் தெரிவித்தார்.

சாந்தா ஆப்தே கைது!

நாகபுரி, ஏப். 7—

பிரபல சினிமா நட்சத்திரம் சாந்தா ஆப்தே மதுவிலக்குச் சட்டத்தை மீறியதாக நாகபுரி போலீசாரால் கைது செய்யப்பட்டார். அவர் தங்கியிருந்த ஓட்டல் அறையில் 6 புட்டி வெளிநாட்டு மது வகைகளைக் கைப்பற்றியதாகக் கூறப்படுகிறது. அவர் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

வாக்கெடுப்பு நடத்த அவசியமே இல்லை!

பிரெஞ்சிந்தியப் பிரதிநிதி கருத்து

காரைக்கால், ஏப். 7—

பிரெஞ்சு நாட்டு சட்டசபையில், பிரெஞ்சு இந்தியாவின் பிரதிநிதியாக உள்ள ஹென்றி ஜக்குவிர், "இங்குள்ள தற்போதைய நிலைமையை, இந்தியாவும், பிரான்சும் தெளிவாகத் தெரிந்து கொண்டிருப்பதோடு, ஒரு விரும்பத்தக்க ஒப்பந்தத்திற்கு வரக் கருதிக் கொண்டிருப்பதால், இந்த பிரஞ்சு ஆதிபத்தியத் திட்டுகளின், மக்களது விருப்பத்தை அறிவதற்கென்று வாக்கெடுப்பு நடத்தவேண்டிய அவசியம் எதுவும் இல்லை," என்று அறிவித்தார்.

பற்பல கட்சிகளின் தலைவர்களையும், பல்வேறு குழுவினரையும், சந்தித்து அவர்களது கருத்துக்களை அறிந்துகொண்டுள்ள ஜக்குவிர், பிரான்சுக்குத் திரும்பியதும், இங்குள்ள நிலைமையைக் குறித்துத் தாம் கொண்ட முடிவுகளை எடுத்துக் கூறி—அரசாங்கத்துடன் விவாதிப்பார் எனத் தெரிகிறது.

சோஷலிஸ்டு தலைவர்களான, குபேர் முதலானோர், இந்திய—பிரெஞ்சு அரசாங்கங்களுக்கிடையே பேச்சு வார்த்தை நடக்கத் தொடங்கும் நிலையில், திடீரென்று எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை, தான், ஏற்க முடியாது என்றும் தெரிவித்தார்

ஐக்கிய முன்னணியில் பிளவா?

புதுடில்லி, ஏப். 6—

திரு—கொச்சியில், ராஜ்யசபைத் தேர்தலுக்கு புரட்சி சோஷலிஸ்ட் கட்சி அபேட்சகரை ஐக்கிய முன்னணியின் அபேட்சகராக நிறுத்துவதென ஒப்புக்கொண்டுவிட்டு, அதற்கு மாறாகக் கம்யூனிஸ்டு கட்சி அபேட்சகரை நிறுத்தியது பற்றி கம்யூனிஸ்டு குழுவினர் திருப்திகரமான சமாதானம் சொல்லாவிடில், ஐ. மு.—விலிருந்து ஆர். எஸ். பி. கோஷ்டியினர் வெளியேறிவிடவேண்டுமென்று அக் கட்சியின் மத்தியக் கமிட்டிக் கட்டளையிட்டிருக்கிறது.

மேற்கு பாக்கிஸ்தானிலு[ம்] 'ஐக்கிய முன்னணி' முயற்[சி]

—:o:—

எதிர்க்கட்சி உருவாகிறது!

காராச்சி, ஏப். 6—

நாட்டினது அரசியல் நிலை குறித்தும், சில முக்கிய முடிவுகளைச் செய்வதற்கும், இரண்டு கிழமைக்குள் கூடிப்பேச பாகிஸ்தான் அரசாங்கத்தில், எதிர்க்கட்சித் தலைவர்கள் தற்காலிகமாக இசைந்துள்ளனர்.

தலைவர்கள் தத்தம் பகுதியில் உள்ள குறைபாடுகளை முதல் சந்திப்பிலேயே தெரிவித்துக் கொண்டுள்ளனர். மேற்கு பாகிஸ்தானில் உள்ள எல்லா குறைபாடுகளை முதல் 'சந்திப்'பிலேயே தெரிவித்துள்ளனர். மேற்கு பாகிஸ்தானில் உள்ள எல்லா எதிர்க் கட்சிகளும் ஒரு அரசியல் திட்டத்தின் கீழ் ஒன்றுபட்டு, கிழக்கு வங்கத்தைப் போன்று ஓர் ஐக்கிய முன்னணி நிறுவ வேண்டுமென்ற கருத்து வலுப்பெற்று வருகிறது.

எல்லைப் புறத்தில் உள்ள எதிர்க்கட்சித் தலைவர்களும் ஒன்று சேர்ந்து ஆளவந்தாருக்கு எதிரான ஓர் ஐக்கிய முன்னணி தோற்றுவிப்பதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் எனவும் தெரிகிறது.

அமைச்சர் வேலை..

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

லும் ஈடுபட்டனர்.

கவிஞர் சட்டோபாத்தியாயா மேலும் தொடர்ந்து பேசும்போது "அமைச்சர் அகில இந்திய ரேடியோ நிலையத்தில் செய்துள்ள 'சர்க்கஸ் வேலைப்பாடுகளில்' ஆலோசனைக்குழு அமைத்ததும் ஒன்றாகும்; அந்தக் குழு செய்ததெல்லாம் பலரை வேலையிழக்கச் செய்ததைத் தவிர, வேறொன்றும் இல்லை; திரைப்பட இசையைத் தடுத்துவிட்டு சாஸ்திரீய இசையைப் புகுத்துவதன் மூலம் கண்ட பலன் என்ன? பணம் பாழானதுதானே? ஆலோசனைக் குழு உருப்படியான செயல் என்ன செய்தது?' என்று ஆத்திரத்தோடு கேட்டார்.

மேலும் பேசும்போது, "வானொலி இலாகா ஒரு சிலரின் கைப்பொம்மையாக இருந்து வருவதை மாற்றிப் பொதுமக்கள் தம் விருப்பப்படி பயன் பெறும் அறையாக மாற்றி அமைக்கப்பட வேண்டும் என்றும், பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய குழுவொன்றின் மேற்பார்வையில் அது வைக்கப்பட வேண்டும்" என்றும் வற்புறுத்திக் கூறினார்.

பாதுகாப்புக்கு மட்டும் ரூ. 2,073 கோடி!

லண்டன், ஏப். 6—

பிரிட்டிஷ் வரவு — செலவில் மொத்த வருமானம் 453,28,75,000 பவுன் என்றும், செலவு 452,23,99,000 பவுன் என்றும், மிச்சம் 1,04,76,000 பவுன் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் செலவில் பாதுகாப்புக்காக மட்டும் 155,50,00,000 பவுன் (சுமார் 2,073 கோடி ரூபாய்) ஒதுக்கப்படும் என்று தெரிகிறது.

இது சென்ற ஆண்டைவிட 77 கோடி 33 லட்சம் அதிகம்.

ஊடுருவினர்

ஹனாய் (இந்தோ-சீனா) ஏப். 7—

பசார்ந்திச் சமவெளியில் வியட்மின் துருப்புகள் வெகுதூரம் ஊடுருவிப் புகுந்திருப்பதாகப் பிரெஞ்சு அதிகாரிகள் கூறினர்.

சேலம்-அம்மாப்பேட்[டை] தி.மு.க. உறுப்பினர்கட்[கு]

✵

"10-4-54 சனி இரவு [...] மணிக்கு, அம்மாப்பேட்[டை] தி. மு. கழகக் கட்டிடத்தி[ல்] தி. மு. கழக உறுப்பினர் கூ[ட்]டம் நடைபெறும். அது[சம]யம் மே மாதம், 1, 2-ந் தே[தி]களில் நடைபெறப்போகு[ம்] நமது மாவட்ட மாநா[டு] குறித்து ஆலோசிக்கப்படு[ம்]. உறுப்பினர் அனைவரும் த[வ]றாது வரக் கேட்டுக்கொ[ள்]கிறேன்," என்று செயலாள[ர்] பி. எம். கோபால் அறிவி[க்]கிறார்.

பூனாவில் 'இந்தி'..

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

ராவார்கள்.

"பெரும்பாலோர[து] கருத்தை அலட்சியம் செய்[து] ஒதுக்கிவிட்டுப் பம்பாய் அர[சு] இதைச் செய்திருப்பதால், ம[க்]களது எதிர்ப்பு இறுதியி[ல்] வெற்றி பெற்றே தீரும்.

"பண்டித நேருவின் எ[ச்]சரிக்கையும் கூட, பம்பா[ய்] அமைச்சர்களிடம் பயனற்று[ப்] போய்விட்டதாகவே தெ[ரி]கிறது

• "கூர்ஜர மக்களோ, த[ம]வர்களுக்கே கடமைப்பட்டு[ள்]ளதால, 'நடப்பது நடக்க[ட்]டும்,' என்றுள்ளனர் போலு[ம்].

"பூனா மக்களின் அமை[தி]யான எதிர்ப்பு நடவடி[க்]கையை ஒத்து, குஜராத்[தி]களும், தமது மொழியை[ப்] பாடப் பயிற்சி மொழியாக ஏ[ற்]றுக்கொள்ளச் செய்வதற்கா[க] தாமும் நடவடிக்கை எடு[ப்]பது தவிர்க்க முடியாத க[ட]மையாகும். மராத்தியர் தம[து] இலட்சிய வெற்றிக்கும் பா[டு]பட்டபோது 'குஜராத்தி[யர்] தூங்கினர்,' என்ற பழி[ச்] சொல்லுக்கு இடமளித்துவி[ட]வேண்டாம்!'

காமராஜ் 'முடி'...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிகிறது.

ஆனால் முடியிலே மூன் இல்லா[]மல் பார்த்துக்கொள்ளும் ஆ[]வம், தம் பிடியிலே வரும் ஆட்சி[]யில் மக்களின் துயர் துடைப்ப[]தற்கான வழி என்ன என்பதிலே[] இருப்பதாகப் புலனாகவில்லை[] அவரது பதில்களினின்றும்!

என்றாலும், சில நாட்கள்[] தானே, உண்மை உலகுக்கு[] விளங்க! பொறுத்தால் தெ[ரி]கிறது!

இந்தியக் கடற்படையில் "நைஜீரியா!"

புதுடில்லி, ஏப்ரல் 7—

"நைஜீரியா" என்ற பிரிட்டிஷ் போர்க் கப்பலை விலைக்கு வாங்க இந்திய சர்க்கார் ஒப்பந்தம் செய்து கொண்டது. இந்தியக் கடற்படையில் பயிற்சிக் கப்பலாக இது சேர்க்கப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா.செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, நாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்படுகிறது. ஆசிரியர்! [illegible]